செ.வெ.எண் : 27 நாள் : 10.07.2020

**மாண்புமிகு அம்மா அவர்களின் மனத்திற்கு நெருக்கமான நீலகிரி மாவட்டத்தில் படுகர், பழங்குடியினர் மற்றும் இதர வகுப்பினர்களின் நீண்ட நாள் கனவான அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அடிக்கல் நாட்டியமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் புகழாரம்**

நீலகிரி மாவட்டத்தில் 40 ஏக்கர் பரப்பளவில், ரூ.447.32 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். நீலகிரி மாவட்ட மக்களின் நீண்நாள் கோரிக்கையினை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மாவட்ட மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுற்றுலாவிலும் சூழலியலிலும் உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்த உதகை மண்ணில் ஏழை எளிய மற்றும் தேயிலை தோட்டத் தொழிலாளர், விவசாய கூலிகள் மற்றும் சுற்றலா பயணிகள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவக் கல்லூரிக்கு ரூ.447.32 கோடி நிதியொதுக்கித் தந்து, 40 ஏக்கரில் அமையப்பெறும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு இன்று அடிக்கல் நாட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, பெரும் பெருமையும் உவகையும் அடைகிறேன்.

நீலகிரிக்கென்று பல்வேறு சிறப்புகள் இருக்கின்றன. தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழகத்தில் பாய்ந்தோடும் பவானி, மாயாறு, கல்லாறு உள்ளிட்ட பல்வேறு நதிகளுக்கும் தாய்மடியாக விளங்குவது நீலகிரியிலுள்ள காடுகள்தான்.

நம் வீடுகளில் மாடியில் தண்ணீர்த்தொட்டி அமைப்பது போல சமவெளியிலுள்ள மக்களுக்கான நீர்த்தொட்டியை நீலகிரியில் இயற்கை அமைத்துத் தந்திருக்கிறது. எனவே நீலகிரியைக் காப்பாற்றும் பொறுப்பு இங்குள்ள மக்களுக்கு மட்டுமின்றி தமிழக மக்களுக்கே இருக்கிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகவும் நேசித்த மண் இது என்ற வகையில், நாங்கள் என்றென்றும் நீலகிரியை மிகவும் நேசிக்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார், அவாகள் தலைநகரத்துக்குத் தரும் முக்கியத்துவத்தை இந்த மலைநகரத்துக்கும் தந்து எண்ணற்ற திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகின்றார்.

நீலகிரி தமிழகத்திலேயே மிகவும் சிறிய மாவட்டமாக இருக்கலாம். ஆனால் முழுக்க முழுக்க மலைமாவட்டம் என்ற வகையில், தேசிய அளவில் தனித்துவம் வாய்ந்த (NATIONALISED DISTRICT) மாவட்டமாக உள்ளது. இங்குள்ள மக்களை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகவும் நேசித்தார். இவர்களுக்காக எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வந்தார்.

பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நீலகிரி மண்ணின் மைந்தர்கள் போராடியபோது, அவர்கள் மீது தடியடி, கண்ணீர்ப்புகை வீச்சு என்று கடுமையான தாக்குதல் நடத்தியது தி.மு.க அரசு. படுக இன இளைஞர்களை நடுரோட்டில் அரை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியது. ஆனால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் தேயிலை விவசாயிகளின் கண்ணீர் கோரிக்கைகளை கனிவோடு நிறைவேற்றினார். ஊட்டி டீயை ரேஷன் கடைகளில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்.

உயர்கல்வி, உயிர் காக்கும் மருத்துவம், வேலைவாய்ப்பு என எதையுமே இங்கு ஏற்படுத்திக் கொடுக்காமல் நீலகிரி மண்ணின் மைந்தர்களை இந்த மாவட்டத்தை விட்டு கூட்டம் கூட்டமாக இடம் பெயரச் செய்ததே தி.மு.க.வின் சாதனை. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது,

தமிழகத்தில் இருந்த 32 மாவட்டங்களில் எல்லா மாவட்டங்களிலும் மக்கள் தொகை கணிசமாக அதிகரித்திருந்தது. ஆனால் நீலகிரியில் மட்டுமே 3 சதவிகிதம் அளவிற்கு மக்கள் தொகை குறைந்திருந்தது. 2011ம் ஆண்டிற்கு முன்னர் வரை பத்தாண்டுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கிருந்து சமவெளிகளுக்கு குடிபெயர்ந்திருக்கின்றனர்.

உயர் கல்வி, வேலைவாய்ப்பு, மனித-வனஉயிரின மோதல் என இதற்கு வேறு பல காரணங்கள் கூறப்பட்டாலும் உயிர் காக்கும் சிகிச்சை தரும் உயர் ரக மருத்துவமனை இங்கு இல்லை என்பதுதான் மிக முக்கியமான காரணம். இருதயப் பிரச்சினை, ஆஸ்த்மா என பல்வேறு நோய்களால் அவதிப்படும் முதியவர்களும் நோயாளிகளும் மேல் சிகிச்சைக்காக கோவைக்குச் செல்ல வேண்டியமென்ற கட்டாய நிலை இருந்து வந்தது, ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் இங்குள்ள பெருவரியான ஆரம்ப சுகாதாரநிலையங்களுக்கு புதியக் கட்டிடங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதிகள், ஸ்கேன் இயந்திரங்கள், பரிசோதனை கருவிகள் என பல்வேறு வகையில் மேம்பட்ட மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தினாாகள்.

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் இங்கு அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் வழியில் நடக்கும் அண்ணன் எடப்பாடியாரின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மருத்துவக் கல்லூரி, இங்குள்ள பல லட்சம் ஏழை எளிய மக்களுக்கு உயிர் காக்கவும் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளவும் எல்லா வகையிலும் உதவிகரமாக இருக்குமென்று உறுதி கூறுகிறேன்.

இந்தத் திட்டம் மட்டுமல்ல எதிர்காலத்தில் நீலகிரி மக்களுக்கு பயன் தரும் வகையிலான பல்வேறு புதிய திட்டங்களும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். தோட்டக்கலையில் சிறந்து விளங்கும் மாவட்டம் என்பதால் அது சார்ந்த உயர் கல்வி நிறுவனத்தை இங்கு துவக்குவது பற்றியும் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். சீசன் காலங்களில் இங்குள்ள

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மல்டி லெவல் பார்க்கிங், அரசு சுற்றுலா வாகன அறிமுகம் போன்ற திட்டங்களையும் அரசு பரிசீலித்து வருகிறது.

ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த 9 ஆண்டு காலத்தில், நீலகிரி மாவட்ட மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு, பல்வேறு மகத்தான சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நான் சார்ந்த நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி துறையின் சார்பில், நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான அடிப்படை கட்டமைப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 68 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 3,976 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 3,923 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தனிநபர் இல்ல கழிப்பறைத் திட்டத்தின் கீழ், 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 51,134 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 311 ஊரக பள்ளிகளில் புனரமைப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

219 கோடி மதிப்பீட்டில், 282 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ், 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,156 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 525 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,376 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தன்னறைவு திட்டத்தின் கீழ், 9.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 163 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 அம்மா பூங்காக்கள் மற்றும் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 அம்மா உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 9 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊராட்சிப் பகுதிகளில், மொத்தம் 710 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 87,771 பணிகள் மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும், உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் ஆகிய நகராட்சிப் பகுதிகளில், சாலைப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், தெரு விளக்குப் பணிகள் உள்ளிட்ட 2,715 பணிகள், 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

11 பேரூராட்சிப் பகுதிகளில், 118 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,743 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ரூ.38 கோடி மதிப்பீட்டில் 172 சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

5 கோடி மதிப்பில் உதகை நகராட்சியின் சார்பில் உதகை கோடப்பமந்து கால்வாயினை சீரமைக்க செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.50இலட்சம் மதிப்பில் பொதுப்பணித்துறை சார்பில் குன்னூர் வட்டாரத்திற்குட்பட்ட நெடிங்கோடு, சேலாஸ் பகுதியில் சுகாதார நல மைய கட்டடம் கட்டுதல்

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைளுக்காக 2 அவசர கால ஊர்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின்கீழ் கோவிட் 19 நிதி உதவி தொகுப்பு நீலகிரி மாவட்டத்திற்கு ரூ.4.05 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீடு நலிவுற்றோர் (ம) மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவி, தனி நபர் தொழில், உற்பத்தியாளர் குழு, உற்பத்தியாளாளரு குழு கூட்டமைப்பு, தொழில் குழுக்கள், இடம் பெயர்ந்து திரும்பிய என 6 வகையாக பயீர் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது

ஊரக வளர்ச்சி முகமையின் ஊரக சார்பில் 2020-2021 ம் நிதியாண்டிற்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களுக்கு 410 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 2019-2020ம் நிதியாண்டில் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் தாயகம் திரும்பிய 578 பயனாளிகளுக்க தற்போது வரை 222 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பேரூராட்சியின் சார்பில் 2018-10 மற்றும் 2019-20 நிதியாண்டிற்கு 789 பழங்குடியின வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

36,035 மாணவ, மாணவியர்களுக்கு, 48 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெண்களது முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, பணிக்கு செல்லும் பெண்களுக்கு உதவிடும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்மொழிந்த ”அம்மா இருசக்கர வாகனத் திட்டம்”” எனும் கனவு திட்டத்தை நனவாக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நாடே வியக்கும் வகையில், இத்திட்டத்தினை நிறைவேற்றி, பணிக்கு செல்லும் பெண்கள் மானிய விலையில் இரு சக்கர வாகனங்களை வழங்கி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், இதுவரை பணிக்குச் செல்லும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து பயனளிகளுக்கும் மொத்தம் ரூ.2 கோடியே 86 இலட்சத்து 50 ஆயிரம் மானியத்தில், 1146 இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதே போல், நீலகிரி மாவட்டத்தில், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு, இதுவரையில் 864 கோடி ரூபாய் வங்கி கடனாக வழங்கி சாதனைப் படைக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மட்டும், நாளது வரை மகளிர் குழுக்களுக்கு 188 கோடி வங்கி கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் இதுபோல ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிவந்த மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாரின் அரசு தயாராகவுள்ளது. மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலான் அரசு தொடர்ந்து செயல்படும் எனஉறுதிபட தெரிவித்துக் கொளவதோடு,

கேட்கின்றதையெல்லாம் கொடுக்கும் அட்சய பாத்திரமாய், மக்கள் நலன் சார்ந்து வைக்கப்படும் கோரிக்கைகளை எப்போதும் அதில் கானும் சிரமங்களை காணாமல், பயன்பெறும் மக்களை எண்ணி திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு அரசு மருத்துவக்கல்லூரி பணிகளுக்கு அடிக்கல் நாட்டியமைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் செய்திக்குறிப்பின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொ), நீலகிரி மாவட்டம்.